
CFM/R/12

(12)

# நீர் வெறுப்பு நோய்
## (விசர் நாய்க்கடி) RABIES




இது றேபிஸ் (Rabies) எனப்படும் ஒரு வகை வைரசினால் குறுகிய காலத்தில் மையநரம்புத்தொகுதியில் ஏற்படுத்தப்படும் ஓர் தொற்று நோயாகும்.

நீர் வெறுப்பு நோய்த்தொற்றலுக்கு உள்ளாகிய நோயாளிக்கு இறப்பு ஏற்படுவது நிச்சயம்.

## றேபிஸ் எவ்விதம் மனிதனை சென்றடைகிறது?

- இது பொதுவாக நீர்வெறுப்பு நோயுள்ள விலங்குகள் மனிதனை கடிப்பதாலோ அல்லது நோயுள்ள விலங்குகளின் உமிழ்நீர் காயங்களின் மேல் விழுவதாலோ அல்லது சீத மென்சவ்வினூடாகவோ மனிதனை அடைகிறது.
- இந்த வைரசானது பொதுவாக நோயுற்ற விலங்குகளின் நரம்புத்தொகுதி,உமிழ்நீர், சிறுநீர், பால், குருதி, நிணநீர், கண் ,தோல், சிறுநீரகம் போன்றவற்றில் காணப்படும்(நாய், ஓநாய், நரி, பூனை, வௌவால்)
- நோயுள்ளவரின் உடற்பகுதி சிலவற்றை வேறு ஒருவருக்கு பொருத்தி சிகிச்சை செய்யும் போது. (உதாரணம்: விழிவெண்படல மாற்றுச்சிகிச்சை)
- அரிதாக காற்றினாலும் பரவுகிறது. (உதாரணம்: வௌவால்கள் வசிக்கும் குகைகளில் உள்ள காற்றை சுவாசித்தவர்களுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.)
- ஆரோக்கியமான தோலினூடாக இவ்வைரஸ் உடலினுள்ளே செல்லாது. ஆனால் சீதமென்சவ்வினூடாக எளிதில் உட்செல்லும்(ஊதாரணம்:கண்,மூக்கு)


அனுசரணை:

LIONS We Serve

LIONS CLUB OF VAVUNIYA

2001/2002 306 B SRI LANKA SERVE TODAY FOR A BETTER TOMORROW

## நீர்வெறுப்பு நோயின் அறிகுறிகள்.

- இந்நோயின் நோயரும்புகாலம் பொதுவாக 1-2மாதங்கள். சிலவேளைகளில் இது 1 கிழமை தொடக்கம் 6 வருடம் வரை மாறுபடலாம்.

- நோயரும்புகாலம் விசர்நாய் கடிக்கு உள்ளாகுபவரின் வயது, நீர்ப்பீடண நிலை, காயம் ஏற்படும் இடம், காயத்தின் தன்மை, மற்றும் வைரசின் எண்ணிக்கை போன்றவற்றில் தங்கியிருக்கும்.

- இந்த வைரசானது விசர் நாய் கடித்த காயம் இருக்கும் இடத்தில் முதலில் பெருக்கமடையும். பின்னர் நரம்புகளினூடாக மையநரம்புத் தொகுதியை அடைந்து நீர்வெறுப்பு நோயை ஏற்படுத்தும்.

- விசர் நாய் கடித்ததை தொடர்ந்து மெல்லிதான காய்ச்சல், தலையிடி, சோர்வு, தொண்டை நோ, பசியின்மை, ஓங்காளம், சத்தி, கடித்த இடத்தில் வலி, நமைச்சல் போன்று பொதுவான அறிகுறிகள் தென்படும்.

- அதனை தொடர்ந்து நரம்புத் தொகுதி பாதிப்படைவதால் ஏற்படும் அறிகுறிகள் தோன்றும். அவையாவன:-

- சத்தம், வெளிச்சம், காற்றின் தொடுகை போன்றவற்றினை சகிக்க முடியாது.

- தொடர்ந்து தசைப்பிடிப்பு,அதிகமாகும் நீர் விழுங்க முடியாத நிலை ஏற்படும்.

- நீரைக்கண்டாலோ அல்லது அதன் ஒலி கேட்டாலோ தசைப்பிடிப்பு மேலும் அதிகமாகும். இதனால் நீரை கண்டால் அவர் வெறுத்து ஓடுவார். (நீர் வெறுப்பு)

- இதனை விட ஓய்வின்மை, அருட்டப்பட்டநிலை, தசைத் தொழிற்பாடு இழத்தல், தசைப்பிடிப்பு, பயம், குருதி அமுத்தம் கூடியிருத்தல், மன உழைச்சல் என்பன ஏற்படும்.

## நீர் வெறுப்பு நோயை எவ்வாறு தடுக்கலாம்?

- நாய் கடித்த காயத்தை சவர்க்காரமும் நீரும் கொண்டு நன்கு கழுவுதல் வேண்டும்.

- விசர் நாய்க்கடிக்கு எதிரான தடுப்பூசியினை **(IMMOVAX)** முறையாகப் போடுதல் வேண்டும்.

- கடித்த நாய் நீர் வெறுப்பு நோய்க்குரிய அறிகுறிகளைக் காண்பிக்கின்றதா என்பதை அவதானிக்கவேண்டும்.

  அல்லது நாயினைக் கொன்று அதன் முளையில் வைரஸ் இருக்கின்றதா என்று பரிசோதிக்க வேண்டும்.(மேற்கு நாடுகளில் நடைபெறுகின்றது)

- வீட்டில் வளர்க்கும் நாய், பூனைகளுக்கு தடுப்பூசி போடுதல் வேண்டும்.

- கட்டாக்காலி விலங்குகளை அழித்தல்.

## தடுப்பூசி போடவேண்டிய சந்தர்ப்பங்கள்

### நாய் கடிப்பதற்கு முன்னர்

* விலங்குகளுடன் கூடுதலாக பழகுபவர்கள்
  உதாரணம் : கால்நடை வைத்தியர்கள் ,அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள், வனஇலாக அதிகாரிகள், காடுகளிற்கு செல்பவர்கள் (வேட்டைக்காரர், ஆராய்ச்சியாளர்) முன்னெச்சரிக்கையாக தடுப்பூசி போடுதல் வேண்டும்.

தடுப்பூசி போடவேண்டிய நாட்கள் -0,7,28 நாட்கள்.

### நீர்வெறுப்பு நோயுள்ள நாயில் பொதுவாக காணப்படும் அறிகுறிகள் :-

- ✓ நாயின் நடத்தையில் மாற்றம்.
- ✓ நாய் அமைதியின்றி அலைதல்
- ✓ நாயின் குரல் மாறுதல்.
- ✓ அதிகளவு உமிழ்நீர் வடிதல்.

## நாய் கடித்த பின்னர்

* கடித்த நாய் இரண்டு கிழமைக்குள்
  இறந்தால் அல்லது
  காணாமல் போனால் அல்லது
  ஆரோக்கியமற்றுக் காணப்பட்டால்.

* கடித்த நாயை தொடர்ந்து கண்காணிக்க முடியாத போது (உதாரணம் - தெருநாய்)

* கடித்த நாய்க்கு நீர் வெறுப்பு நோய் என சந்தேகிக்கும் போது.

குறிப்பு:

சிலர் ஏற்பு வலிக்குரிய தடுப்பூசியை (Tetanus Toxoid) விசர்நாய்க் கடிக்குரிய தடுப்பூசியாக (IMMOVAX) கருதி நீர் வெறுப்புநோய்க்குரிய தடுப்பு ஊசியினை போடாமல் விடுகிறார்கள் இது மிகவும் ஆபத்தானது , விசர் நாய் கடித்தால் நீர் வெறுப்பு நோய்க்குரிய தடுப்பு ஊசியினை கட்டாயம் போடுதல் வேண்டும்.

**முற்றான தடுப்பூசியினை**
**0, 3, 7, 14, 30, 90 ஆம் நாட்களில்**
**போடுதல் வேண்டும்**

வெளியீடு: சமுதாய மருத்துவ துறை,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Designed By: VASTEC, Vavuniya.